**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. No.161/2019**

**19.11.2025. அ.சா.6 ராமகிருஷ்ணன் த/பெ. ராமநாதன்**

A1 and 3 present. A2 absent. Petition U/s. 317 Crpc filed and allowed.

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

ஆனானந்தல் கிராமத்தில் இருந்து பொறிக்கல் கிராமம் 2கி.மீ தூரம் இருக்கும். நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். வழக்கில் இறந்த ராஜாம்மாள் எனக்கு உறவினர் அல்ல. நான் அவரிடம் வேலை செய்யவில்லை. ராஜாம்மாளின் மகனும் நானும் உறவினர்கள் என்றால் ஒரே வகுப்பை சேர்ந்தவர்கள் என்பதால் தெரிந்தவர்கள். ராஜாம்மாளின் மகனுக்கும் எனக்கும் எந்த விரோதமும் இல்லை. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும். நான் கையெழுத்து செய்தபோது அங்கு 3 , 4 நபர்கள் இருந்தார்கள். என்னுடன் பழனி என்பவர் கையெழுத்து போட்டார். நான் டைல்ஸ் போடும் வேலை செய்து வருகிறேன். வெறையூர் காவல் நிலையத்தில் எங்கள் ஊர் பிரச்சனை சம்மந்தமாக சென்றுவரும் பழக்கம் எனக்கு உள்ளது என்றால் அப்படி எதுவும் இல்லை. போலிசார் ஓடக்கரையில் இருந்தார்களா என்றால் நிலத்தருகே இருந்தார்கள். இவ்வழக்கின் எதிரிகளுடன் எனக்குபேச்சுவார்த்தை கிடையாது. எந்த பிரச்சனைகள் சம்மந்தமாகவும் நானும், எதிரியும் பேசிக்கொள்வது இல்லை. டைல்ஸ் போடுவது சம்மந்தமாக எனக்கும் எதிரிகளுக்கும் கொடுக்கல் வாங்கல் பிரச்சனை இருந்தது என்றால் சரியல்ல. எனது கிராம பிரச்சனை சம்மந்தமாக நான் அவ்வப்போது காவல் நிலையம் செல்லும் நபர் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார்கள் கேட்டுக்கொண்தற்கிணங்க எதிரிகள் மீது இருந்தவிரோதம் காரணமாக நான் காவல் நிலையத்தில் கையொப்பம் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. என் முதல் விசாரணையில் சொல்லியவாறு சம்பவ இடத்தில் 19.06.2017 அன்று கையொப்பம் செய்யவில்லை என்றும் காவல் நிலையத்தில்தான் கையொப்பம் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் போலிசார் சொல்லிக்கொடுத்தவாறு நான் நீதிமன்றத்தில் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.